Source: *Tamil Murasu*, p3
Date: 9 May 2020

# ‘கிருமித்தொற்றை கட்டுப்படுத்தும் சில நடைமுறைகள் தொடர்ந்து நடப்பில் இருக்க வேண்டும்’

கொவிட்-19 நோய்ப் பரவலை முறியடிப்பதற்கான திட்டம் முடிவுக்கு வந்த பிறகும் ஒரு சில நடைமுறைகள் தொடர்ந்து நடப்பில் இருக்க வேண்டும் என சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சாவ் சுவீ ஹாக் பொதுச் சுகாதாரப் பள்ளியைச் சேர்ந்த ஆய்வுப் பிரிவுத் துணைத் தலைவர் அலெக்ஸ் குக் தெரித்துள்ளார்.

கட்டுப்பாடுகள் இல்லாமல் வாழ்க்கை வழக்கநிலைக்குத் திரும்பினால், கிருமித்தொற்று சம்பவங்கள் உச்சகட்டத்தை எட்டும் அபாயம் இருப்பதாக அவர் சொன்னார்.

மக்களுக்கு இடையே பாதுகாப்பான தூர இடைவெளி நடைமுறை கடைப்பிடிக்கப்படாவிட்டால், சமூகத்தில் கொரோனா கிருமி மீண்டும் பரவக்கூடும் என அவர் எச்சரித்தார்.

இந்த நிலையைத் தவிர்க்க, பாதுகாப்பான இடைவெளி நடைமுறைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும் என இணைப் பேராசிரியர் குக் வலியுறுத்தினார்.

வேலையின் சூழலைப் பொறுத்து, முதலாளிகள் தங்களது ஊழியர்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு வீட்டில் இருந்தவாறு வேலை செய்ய ஊக்குவிக்க வேண்டும் என அவர் சொன்னார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.